2019 பிப்ரவரி 13]

முற்பகல் 11-50

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு)*

(திரு. மு. திராவிடமணி நின்று கொண்டிருந்தார்.)

உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் என்றால் நீங்கள் உட்கார வேண்டும். இப்படி நின்று கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் உட்கார்ந்தால்தான் அடுத்த அலுவலுக்குப் போக முடியும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. உ. மதிவாணன் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகக் கேளுங்கள்.

(ஆ) நாகப்பட்டினம், வடக்குப்பொய்கை நல்லூர், மின்சாரம் தாக்கி உயிரிழந்த சரவணன் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

***திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, நாகப்பட்டினம் தாலுகா, வடக்குப்பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய சரவணன், தகப்பனார் பெயர் மாரிமுத்து என்பவர் 15-1-2019 அன்று 11-45 மணியளவில் மின்சாரம் தாக்கி மரணம் அடைந்துவிட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவரின் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்கும்படி இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வடக்குப்பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காத்தலிங்கம் என்பவர், மின் கம்பம் நடும் பணிக்கு, அவ்வழியே சென்று கொண்டிருந்த, திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவரை அழைத்து, அப்பணியினை மேற்கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியதில், திரு. சரவணன்*

சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைகின்றேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. சரவணன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சரவணன் அவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) நெல்லை மாவட்டம், பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். அதில் 80 சதவிகிதம் பேர் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலங்குளம் தொகுதியில் ஒரு இலட்சத்து 10,000 பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். முக்கியமாக அவர்கள் 1,000 பீடி சுற்றினால் 204 ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். வருங்கால வைப்பு நிதியாக ரூபாய் 20-ஐ பிடித்துவிட்டுத்தான் அந்தக் கூலியை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதில் பெரிய பிரச்சினை என்னவென்றால், கடந்த நான்கு வருடங்களாக, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு 750 ரூபாய், நடுநிலைப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு 900 ரூபாய், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 1,750 ரூபாய், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 2,000 ரூபாய், கலைக் கல்லூரி மாணவர்களுக்கு 3,000 ரூபாய், தொழிற்சார் கல்லூரி* Professional Colleges-ல் *படிப்பவர்களுக்கு ரூ.8,000/- உதவித் தொகையை ஒரு வருடம் அல்ல, இரண்டு வருடங்கள் அல்ல, கடந்த*